**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**

KRISHNAGIRI

**Session Case No. 158/2022**

Prosecution witness LW3 (PW3) Chief

Solemnly affirmed sworn by **Tr.R.Mohan** Grade-I B.C., on date 15.07.2025 in accordance with provisions with the Act of 1873.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு.கோவிந்தசாமி | Father Name | : | திரு.சுப்ரமணி |
| Village | : | | Taluk | : | |
| Calling | : | | Age | : | |

**முதல் விசாரணை:**

நான் சூளகரை கிராமத்தில் குடியிருக்கிறேன் . எம்.ஏ.பி.எட் . படித்திருக்கிறேன். கேசவன் எனக்கு அண்ணன் உறவுமுறை . கேசவன் ஓலா கம்பெனியில் செக்யூரிட்டியாக பணியில் உள்ளார் . நான் வழக்கமாக கேசவன் வீட்டில் மாலை நேரத்தில் இருப்பேன் . 20.10.2021-ம் தேதி சாயங்காலம் 6.00 மணிக்கு டியூட்டிக்கு போவதற்காக சூளக்கரை பஸ் ஸ்டாப்பில் நின்று கொண்டிருந்தார் . அவரை பார்த்துவிட்டு நான் ஊருக்கு கேசவன் வீட்டிற்கு போயிருந்தேன் . அப்போது அவர் தம்பி வந்து கேசவனிடம் இன்னொரு பையன் சண்டை பிடித்துக்கொண்டிருப்பதாக கேசவன் வீட்டில் இருந்த கேசவனின் மனைவி மகள் மற்றும் மருமகளிடம் சொல்லிக்கொண்டிருந்தார். அவருடைய மாப்பிள்ளையும் பொண்ணும் ஸ்பிலண்டர் வண்டியை எடுத்துக்கொண்டு சூளக்கரை பஸ் ஸ்டாப்பிற்கு போனார்கள். நான் 5 நிமிடம் கழித்து சூளக்கரை பஸ்ஸ்டாப் போயிருந்தேன் . நான் போகும்போது சண்டையெல்லாம் முடிந்து கேசவன் கீழே விழுந்துகிடந்தார். First aid செய்வதற்காக கேசவனை அழைத்துப்போய் போச்சம்பள்ளி அரசு மருத்துவமனையில் காண்பித்தோம் . அவர் இறந்து விட்டதாக மருத்துவமனையில் சொன்னார்கள். மேட்டுத்தங்கலைச் ◌ சேர்ந்த அறிவு என்ற நபர் அடித்துவிட்டார் என்று அங்கிருப்பவர்கள் சொன்னார்கள் .

இது சம்மந்தமாக கேசவனின் மகள் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் . அடுத்த நாள் காலை பாடியை கொடுத்தார்கள். போலீசார் அரைமணிநேரத்தில் போச்சம்பள்ளி GH–க்கு வந்திருந்தார்கள் . போலீசார் என்னிடம் விசாரிக்கவில்லை.

<u>சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கக்கோரி அரசுத்தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசுத்தரப்பு வழக்கறிஞரால் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.</u>

<u>அரசுத்தரப்பு குறுக்கு விசாரணை:</u>

தம்பிதுரை குடிபோதையில் இருந்தபோது தான் கேசவனை அடித்தார் என்று சொன்னால் கஞ்சா போதையில் இருந்தபோது அடித்துள்ளார். கையில் உள்ள வளையத்தை கழட்டி தான் கேசவனை அடித்தார் என்று சொன்னால் அப்படி தான் சொன்னார்கள் . கேசவனை அடிக்கும்போது எங்க ஊரைச் சேர்ந்த ஜெயக்குமார், தனபால், அண்ணாமலை ஆகியோர் இருந்தார்கள் என் சொன்னால் அவர்கள் தான் சண்டையை விலக்கிவிட்டார்கள் . அவ்வாறு விலக்கும்போது அதையும் மீறிதான் தம்பிதுரை அடித்தார் என்று சொன்னால் சரிதான். நான் போகும் போது தான் தம்பிதுரை கேசவனை அடித்துவிட்டு அந்த இடத்தைவிட்டு போய்க்கொண்டிருந்தார் என்று சொன்னால் சரிதான். தம்பிதுரை அடித்து காயம் ஏற்பட்டதால் தான் கேசவன் இறந்துவிட்டார் என்றால் சரிதான் . நான் கடந்த 21.10.2021–ம் தேதி போலீஸ் விசாரணையின் போது சம்பவ சமயத்தில் சம்பவயிடத்தில் இருந்ததாகவும் , அப்பொழுது போலீசார் விசாரித்த போது நான் விவரங்களை போலீசாரிடம் சொன்னேன் என்று சொன்னால் சரிதான். முதல் விசாரணையில் சொன்ன விவரங்கள் பொய் என்றும் , எதிரிக்கு ஆதரவாக முதல் விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளேன் என்று சொன்னால் அது தவறு.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

சம்பவ இடத்திற்கு நான் கேசவன் கீழே விழுந்து 5 நிமிடம் கழித்து தான் போனேன் என்று சொன்னால் சரிதான் . கேசவனின் மகளும் மருமகனும் சொல்லிதான் நான் கார் எடுத்துக்கொண்டு போனேன் என்று சொன்னால்

கேசவன் கீழே விழுந்துகிடந்தார் . மகளும் மருமகனும் அழுதுக்கொண்டிருந்தார்கள் அதைப்பார்த்து விட்டு நானாகவே காரை எடுத்துச் சென்றேன். கேசவனிடம் யார் தகராறு செய்தார்கள் அவர் எப்படி விழுந்தார் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்று சொன்னால் சரிதான். எதிரிக்கும் இந்த சம்பவத்திற்கும் சம்மந்தமில்லை என்றும், இறந்து போனவர் எனக்கு உறவினர் என்பதால் நான் எதிரிக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது தவறு.

Additional District Judge

VASUDEVAN DAMODARAN

Digitally signed by VASUDEVAN DAMODARAN

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**

KRISHNAGIRI

**Session Case No. 158/2022**

Prosecution witness LW4 (PW4) Chief

Solemnly affirmed sworn by **Tr.R.Mohan** Grade-I B.C., on date 15.07.2025 in accordance with provisions with the Act of 1873.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு.துரைசாமி | Father Name | : | திரு.குப்புசாமி |
| Village | : | | Taluk | : | |
| Calling | : | | Age | : | |

**முதல் விசாரணை:**

நான் சூளக்கரை கிராமத்தில் வசிக்கிறேன் . பாத்திர வியாபாரம் மற்றும் விவசாய வேலை செய்து வருகிறேன் . இறந்து போன கேசவன் என் தங்கையின் கணவர் . சுமார் 4 வருடங்களுக்கு முன்பாக அரசம்பட்டியில் நான் இருந்தபோது எனக்கு போன் மூலம் கேசவனின் மகள் தன் தந்தையாரை சூளக்கரை பஸ்ஸ்டாப் அருகே மோட்டுத்தாங்கலைச் சேர்ந்த ஒரு பையன் சூளக்கரையில் பெண் எடுத்திருப்பதாகவும், அந்த பையன் தன் அப்பாவை வளையத்தை வைத்து வலது கன்னத்தின் மீது அடித்ததாகவும் , அவரை கீழே தள்ளி நெஞ்சின் மீது அந்த வளையத்தை வைத்து குத்தியதாகவும் அவரை போச்சம்பள்ளி அரசு மருத்துவமனைக்கு எடுத்து போனதாகவும், அங்கே பார்த்துவிட்டு மருத்துவர் அடிப்பட்டவர் இறந்து விட்டதாக தன்னிடம் தெரிவித்ததாக என்னிடம் சொன்னார் . தகவல் தெரிந்து நான் போச்சம்பள்ளி அரசு மருத்துவமனை சென்ற உடலை பார்த்தேன். அடுத்த நாள் போஸ்ட் மார்டம் முடித்து உடலை ஒப்படைத்தார்கள். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

இந்த சம்பவம் நடக்கும்போது நான் அரசம்பட்டிக்கு வியாபாரம் சம்மந்தமாக போயிருந்தேன். கேசவனுக்கு எப்படி அடிப்பட்டது யார் அடித்தார் எப்படி விழுந்தார் என்ற விவரம் நேரடியாக தெரியாது என்று சொன்னால் சரிதான். அன்புநிலாவின் கணவர் தமிழ்குடிமகன் அவர் மாமனாரை பைக்கில் அழைத்துவரும்போது கேசவன் மது போதையாலும் அதிக இரத்த அழுத்தம் காரணமாகவும் அவராகவே கீழே விழுந்துவிட்டார் என்று சொன்னால் அது தவறு. தன் கணவரை தப்பிப்பதற்காக அன்புநிலா என்னிடம் பொய்யான விவரங்களை போனில் சொல்லியுள்ளார் என்று சொன்னால் அது தவறு . இறந்து போனவர் உறவினர் என்பதால் நான் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் அது தவறு.